॥ श्री गुरुविज्ञप्तिः ॥

विधृतपात्र[illegible]दण्डोपरिन्यस्त सरोजहस्तम् ।



कक्षान्तरक्षिप्त सुचेलखण्ड मन्दस्मितं श्रीरमणं नमामः ॥

भगवान् श्री रमण महर्षिः

॥ श्री गुरुविज्ञाप्तिः ॥

(आत्मविद्याभूषणं - वे. जगदीश्वरशास्त्री)

ஸ்ரீ குரு விஜ்ஞப்தி

A PRAYER TO THE MASTER

முதற் பதிப்பு, மார்ச்சு 1942

Printed at The Liberty Press, G.T., Madras.

PREFACE

These *slokas*, written by one well-versed in Vedantic lore and a scholar in Sanscrit, were actually composed while the author was in sick-bed, when even the doctors had despaired of his life.

The verses express the author's deep devotion to Bhagavan Sri Ramana Whose all-powerful Grace has indeed brought him back to life.

May that Supreme Grace of Bhagavan Sri Ramana ever be with us all!

NIRANJANANANDA SWAMY.

முன்னுரை

ஸம்ஸ்க்ருத வித்வானும், வேதாந்தாதி சாஸ்த்ர பாரங்கதருமான ஸ்ரீ ஜெகதீஸ்வர சாஸ்திரிகளால் எழுதப்பட்ட இந்த ஶ்லோகங்கள், அவர் நோய் வாய்ப்பட்டு, வைத்தியர்களும் பிழைக்கமாட்டா ரெனக் கைவிட்ட நிலையிற் செய்யப்பட்டவை.

இந்த ஶ்லோகங்கள் ஆக்கியோனுக்கு ஸ்ரீ பகவானிடத்திலுள்ள ஆழ்ந்த பக்தியை வெளிப் படுத்துகின்றன. உண்மையில் ஸர்வவல்லமையுள்ள ஸ்ரீ பகவானின் அருளே அவருக்கு மீண்டும் உயிர்ப் பிச்சை கொடுத்தது.

ஸ்ரீ பகவானின் பூரணத் திருவருள் நம்மை என்றும் பாலிப்பதாக!

நிரஞ்ஜனானந்த ஸ்வாமி.

ॐ

॥ श्रीगुरुविज्ञप्तिः ॥

1. चित्ते शान्तिप्रणयिनि सतां पञ्जरे राजमानः
स्वान्तेवासिश्रवणसुभगास्सूक्तिधारागृणानः ।
आत्मानन्दास्वदनमुदितो हस्तभूषायमाणः
कीरः कश्चिज्जयति रमणो मोक्षलक्ष्मीमृगाक्ष्याः ॥

சாந்தி ரஸம் ததும்பும் ஸாதுக்கள் ஹ்ருதயக் கூண்டில் விளங்குவதும், தன் ஸமீபத்தில் வஸிக்கும் சிஷ்யர்கள் காது குளிர இனிமையாய்ப் பேசுவதும், ஆத்மானந்தானுபவத்தால் ஸந்தோஷித்துக்கொண்டிருப்பதும், மோக்ஷலக்ஷ்மியென்ற பெண்மணியின் கரபூஷணமாய் விளங்குவதுமான ஸ்ரீரமணனென்ற கிளியொன்று பிரகாசிக்கிறது.

Shining forth in the peaceful heart-cage of the virtuous; uttering streams of wise sayings sweet to the ears of (surrounding) devotees; remaining joyful in the experience of Self-Bliss and serving as an ornament in the hand of the deer-eyed Goddess "Liberation", a certain parrot has come out triumphant as Ramana.

2. कल्याणं नः कलयतु चिरं जङ्गमः कल्पवृक्षः
शोणक्ष्माभृत्कटकवसतिस्सत्प्रसूनाऽभिरामः।
भाग्याज्जातोऽवनितलजुषां स्वात्मसंवित्फलाढ्यः
पांथानां नो भवपथि मुहुस्स्वान्तसन्तापहन्ता॥

அருணாசலத்தின் அடிவாரத்தில் வஸிப்பதும், நல்ல (ஸாதுக்களாகிற) புஷ்பங்களால் மனோஹரமானதும், பூமண்டல வாஸிகளின் பாக்யவசத்தால் பூமியில் தோன்றியதும், ஆத்ம ஞான மென்னும் பழங்கள் நிரம்பியதும், ஸம்ஸார மார்க்கத்தில் வெகு காலம் நடந்து செல்லும் வழிப்போக்கர்களின் ஸந்தாபத்தை யகற்றுவதுமான (ஸ்ரீரமணனென்ற) ஜங்கம கல்பவிருக்ஷம் நமக்குக் கல்யாணத்தை யளிக்கட்டும்.

May the walking tree-celestial of Sri Ramana always pour down good fortune on us—the tree found at Arunachala charming with sweet flowers (namely saints), grown out of the merits of dwellers on earth, laden with the fruits of Self-knowledge and dispelling the distress of weary travellers on the long road of repeated births and deaths!

3. विद्याभ्यासव्रतिनमनघं शोणशैलेन्द्रनाथः
दृष्ट्या दिष्ट्या निकटमुपयन्यं स्वनिष्ठं वितेने।
शान्तं भान्तं कठिनतपसा प्रत्यगात्मैकनिष्ठं
जीवन्मुक्तं विजितकरणं सद्गुरुं संश्रयामः॥

அருணாசலேச்வரர், பரிசுத்தரான எவரை, வித்யாப்யாஸம் செய்துகொண்டிருக்கையில் திடீரென்று தம் த்ருஷ்டியால் தம் ஸமீபம் இழுத்து தம்மிடத்திலேயே

(ஆத்மாவினிடத்திலேயே) இருக்கிறாரோ, எவர் கடின தபஸ்ஸால் விளங்குகிறவராயும், ஆத்ம நிஷ்டராயும், ஜீவன் முக்தராயும், ஜிதேந்திரியராயும், சாந்தராயுமிருக்கிறாரோ அந்த ஸ்ரீ ஸத்குருவை ஆச்ரயிக்கிறோம்.

The school-boy of perfect purity whom Arunachala of His own accord, suddenly drew near Himself and fixed in the Self—the same tranquil, shining One, fixed in the inner Self by virtue of his severe austerities, liberated in this very life, and self-controlled—to Him we surrender as our Lord Master.

4. मत्वाऽऽवेधो भुवनमखिलं लोकमश्वस्तनं यः
स्वेनैव स्वं करवदरवच्छीलयन्पश्यति स्म ।
स्वात्मस्थं तं विगतममताऽहंकृतिं साधुसेव्यं
नाहं कोऽहं तदहमयनोद्बोधकं चिन्तयामः ॥

ப்ரஹ்ம லோகம் முதலிய ஸகல லோகத்தையும் நச்வரமாகக் கருதி, தாமே தம்மாத்மாவை உள்ளங்கை இலந்தைப் பழம்போல விசாரித்துணர்ந்தவரும், ஆத்ம நிஷ்டரும், அஹந்தை மமதை யற்றவரும், ஸாதுக்களால் ஸேவிக்கத் தக்கவரும், “தேகம் நானல்ல”, “நான் யார்?”, “அவனே நான்” என்ற தத்வ வழி காட்டியா யிருப்பவருமான ஸ்ரீ ரமணனைச் சிந்திப்போம்.

Him Who, knowing all the worlds ranking from Brahmaloka to be perishable, by His own efforts sought and realised the Self as clearly and directly as a marble in one's hand; Who remains ever fixed in the Self; is free from the ego and its effects; is worshipped by the holy and remains as guide to the subtle path—"Not (this) I (am); who am I?; That I (am)"—Him we adore!

5. पापिष्ठोऽहं विषयविवशस्सन्ततं रोगभागी
स्वात्मद्वेषी करणविजितः कामलोभाद्युपेतः ।
किंवा कुर्वे रमण ! भगवन् ! नास्ति मेऽन्यश्शरण्यः
त्वत्पादाब्जप्रपतनमृते त्राहि मां तेन दीनम् ॥

5. நான் பாபி, விஷய பரவசன், எப்போதும் ரோக முள்ளவன், ஆத்ம த்வேஷி, இந்திரியங்களால் ஜயிக்கப் பட்டவன், காமலோபாதிகளுடன் கூடினவன். ஹே ரமண ! ஹே பகவன் ! யாது செய்வேன் ? உன் சரணாரவிந்தத்தில் விழுவதைத் தவிர வேறு கதி இல்லை. ஆகையால் எப்போதும் என்னைக் காப்பாற்றுவாயாக.

I am most sinful, always after sensual pursuits, a prey to ills, unfriendly to myself, slave to the senses and swayed by lust, greed etc. What shall I do, Ramana? Lord! I do not know any other saviour. I cannot do more than fall at Your lotus-feet. For this much, save me for ever!

6. धर्मः पापं पुरुकृतमपि प्राक्तनं निर्धुनीते
श्रद्धाभक्तिप्रचयरचितो यः प्रसूते पुमर्थम् ।
वेदोक्त्यैवं तव करुणया पुण्यभाक्त्वं दृढं मे
स्यादेवं त्वत्पदयुगजुषां पुण्यभाक्त्वं समेषाम् ॥

ச்ரத்தாபக்தி பூர்வகம் அனுஷ்டிக்கப்பட்ட புண்ய கர்மாவால், தொன்று தொட்டுச் செய்யப்பட்ட கோடிக் கணக்கான பாபங்கள் யாவுமகன்று மோக்ஷம் ஸித்திக்கு மென்று வேத வாக்கியத்தால் தெரிந்து கொண்டும், நினது கருணையாலேயே நான் புண்ய மடைந்தேன்.

உன்னைச் சரணடைந்தவ ரனைவரும் இவ்விதம் புண்ய சாலிக ளாகவேண்டும்.

The whole mass of past sins is scattered away by virtuous acts done in the present with earnestness and devotion, and the highest good is also attained—so say tbe Vedas. Although I had known this precept, yet only by Your Grace have I acquired spiritual merit. So would all the devotees taking refuge at Your Feet be blessed!

7. पादांभोजे तवपरिमिलल्लोकभृङ्गोपवीते
देवान्मत्वातृणवदितरान्वाल्यएव प्रपत्तेः ।
रुग्णत्वेन द्रविणविरहेणापि चिन्ताग्निदग्धं
मुग्धं भक्तं गुरुवरतवोदासितुं नैव युक्तम् ॥

கூட்டங் கூட்டமான ஜனங்களாகிற வண்டுகளாற் சூழப்பட்ட உனது பாத தாமரையில், மற்றுமுள்ள முப்பத்து முக்கோடி தேவர்களையும் த்ருணமாய் நினைத்துச் சிறு வயதிலேயே நான் சரணம் புகுந்துவிட்டபடியால், ரோகத்தாலும் தாரித்ரியத்தாலும் ஏற்பட்ட கவலை என்ற நெருப்பால் எரிக்கப்பட்டு ஒன்றும் புரியாமல் மூடனாய் உன்னை பஜித்துக்கொண்டிருக்கு மென்னை இப்போது உதாஸீனம் செய்வது உனக்கு உசிதமாகாது.

Even in my youth, considering as straw the gods themselves, I surrendered at Your lotus-feet where groups of people swarmed like bees, and when ills and poverty burn me like fire, and when through sorrow and suffering I become a perplexed fool, still I adore You. Great Lord, Your indifference to me is certainly not just.

8. दातात्वं तनयस्त्वमेव दयिता मातापि तातस्स्वसा
सेव्यस्त्वं सुहृदश्च बान्धवजनास्त्वं देहबुद्ध्यादयः ।
इत्येवं दृढनिश्चये मम सति क्रोधो नते सांप्रतं
क्रुद्धश्चेत्कुलदेशिकः कथय किं कुर्वीत भृत्यः प्रभो ॥

பிரபோ! கொடுப்பவனும் நீயே, புத்திரனும் நீயே, மனைவியும் நீயே, தாயும் தந்தையும் நீயே, தங்கையும் நீயே, ஸேவ்யனும் நீயே, ஸ்னேகிதனும் நீயே, பந்துக்களும் நீயே, தேகம் புத்தி முதலிய யாவும் நீயே என்று நான் திடமாய் எண்ணிக்கொண்டிருக்கையில் என்னிடம் உனக்குக் கோபம் தகுமா? குல குருவுக்குக் கோபம் வந்தால் குலதாஸன் என்னதான் செய்வான்? கூறு.

While I firmly believe that You are my benefactor, son, daughter, wife, mother, father, sister, master, friend and all my relatives; You are even my body, intellect and the like, is it proper that you should be angry with me? Lord, tell me what can a bondslave do if the patriarch gets angry with him!

9. अन्येषु सन्तु गुरुनाथ! कदर्यभावाः
ते हि त्वदन्यविबुधेषु निबद्धभावाः ।
त्वत्पादभक्तिभरितेषु च मादृशेषु
युक्तं नु दैन्यमथवा तव किं प्रभुत्वम् ॥

ஹே குருநாதா! மற்ற ஜனங்களிடம் கிருபணத் தன்மை என்பது இருக்கலாம், அவர்கள் உன்னைத் தவிர வேறு தேவர்களிடம் பக்தி செலுத்தினவர்களா யிருப்ப

தால். உன் சரணங்களை மட்டும் பஜித்துக்கொண்டு வரும் என் போன்ற பக்தர்களிடம் அந்தக் கிருபணத்வம் எப்படி இருக்கலாம்? இருந்தால் உனக்குப் பிரபுத்வம் எப்படி ஸித்திக்கும்?

O my Lord and Master! You may be niggardly to others because they depend on gods other than You; how can You be so to devotees like me who adore Your lotus-feet alone? If You are so, how can You be the All-mighty?

10. कैवल्यामृतलाभलुब्धहृदयास्सन्तः शृणुध्वं वचो
देहेऽस्मिन्नवरन्ध्रकुंभसदृशे नीरोपमं जीवितम् ।
त्वष्ट्रा दिष्टमयेन कायविटपी यावन्नविच्छिद्यते
तावच्छ्रीरमणं शरण्यचरणं प्रध्यायताभ्यर्चत ॥

பேரின்ப அமிருதத்தை அடைய ஆசைகொண்ட ஜனங்களே! ஒரு வார்த்தை சொல்கிறேன்; கேளுங்கள். ஒன்பது துளையுள்ள குடத்தில் ஜலம் போல் ஒன்பது துவாரமுள்ள இச்சரீரத்தில் ஜீவித மிருக்கிறது. இந்தச் சரீரமாகிற மரம் கால கர்ம மென்ற தச்சனால் வெட்டப் படுவதற்குள் ஸ்ரீ ரமணனைத் தியானம் செய்யுங்கள். அர்ச்சனை செய்யுங்கள்.

O good people, eager to gain the nectar of the Absolute, hear me! Life in this body is like water in a pot with nine holes. Even before fate orders the tree of this body to be cut, think of the holy feet of Sri Ramana and worship!

11. अधिव्याधिशतानुविद्धमनसा भैषज्यशालाजुषा
शय्यायां लुठता भृशं प्ररुदता भ्रान्तान्तरेण प्रभो ।
पादाब्जद्वयसन्निधौ तव मया दुर्वारदुःखोद्धृतेः
याच्ञैवं रचिता गुरो ! वद कथंस्यात्प्रार्थनान्यादृशी ॥

ஹே பிரபோ! குருவே! ஆதி வியாதிகளால் துன்புற்ற மனமுடையவனாய், ஆஸ்பத்திரியில் படுக்கையில் துக்கம் தாங்காமற் புரண்டு கொண்டும், ஒன்றும் புரியாமல் தவித்துக் கொண்டும், ஓவென்று அழுது கொண்டிருக்கிற நான் உன் சரண ஸன்னிதியில், எனது துக்கம் எல்லாம் தொலைவதற்காக இந்த மாதிரி பிரார்த்தனை செய்து கொண்டேன். வேறு விதமான பிரார்த்தனை என்ன இருக்கிறது, சொல்.

With mind worn out by cares and the body a prey to disease, lying on a bed in hospital often I get perplexed and cry out "O Lord!". To get rid of my grief in the proximity of Your holy Feet, I write this prayer. Master! say how else can I pray ?

12. श्रीगुरुर्भगवाञ्छ्रेष्ठो व्यापिनः परमेश्वरात् ।
प्रत्यक्षो हि गुरुर्देवः परमेशो न तादृशः ॥

பகவான் ஸ்ரீ ரமண ஸத்குருவானவர் எங்கும் நிறைந்துள்ள பரமேச்வரனைக் காட்டிலும் மேலானவர். ஏனெனில், ஸ்ரீ ரமண ஸத்குருவானவர் ப்ரத்யக்ஷ தெய்வம். பரமேச்வரன் அப்ரத்யக்ஷ தெய்வம். ஆகையால் ஸ்ரீ ரமண ஸத்குருவே சிரேஷ்டமான தெய்வம்.

The holy Master, Lord (Ramana) is greater than even the all-pervading Lord of the Universe, for the Master is seen direct and the other not.

13. आयुष्यमारोग्यमदीनसत्वं
अनन्तसंपद्रमणप्रसादात् ।
स्तोत्रं पवित्रं पठतां नराणां
सिध्येन्नतत्राऽस्ति विचारलेशः ॥

இந்த ஸ்தோத்ரத்தைப் படிக்கும் பக்தர்களுக்கு ஆயுஸ், ஆரோக்யம், காம்பீரியம், ஸத்வகுணம், ஐச்வர்யம் முதலியவை உண்டாகும் என்பதிற் சற்றும் ஸந்தேகமில்லை.

Longevity, health, strength, and supreme self-control and such other virtues flow from the Grace of Sri Ramana to those who will recite this holy prayer. Of this there is not the slightest doubt.

॥ इति श्रीगुरुविज्ञाप्तिः संपूर्णा ॥

॥ ॐ तत्सद्रमणार्पणमस्तु ॥

ஸ்ரீ குருவிஜ்ஞப்தி முற்றிற்று.

ஓம் தத் ஸத்

ஸ்ரீ ரமணார்ப்பண மஸ்து.

திருவண்ணாமலை

ஸ்ரீ ரமணாச்ரம புஸ்தகாலயம்

பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளருளியவை

[தபால் செலவு பிரத்யேகம்]

	ரூ.	அ.	பை
ஸ்ரீ அருணாசலஸ்துதி பஞ்சகம்	0	2	0
உபதேசநான்மாலை (உபதேசவுந்தியார், உள்ளது நாற்பது, அனுபந்தம், அப்பளப்பாட்டு, ஆன்ம வித்தை அடங்கியது)	0	2	0
அநுவாதநூன்மாலை (செய்யுள்) தேவிகாலோத்தர-ஞானசார விசாரபடலம், ஸர்வ ஞானோத்தர-ஆத்மசாட்சாத்காரப்பிரகரணம், தக்ஷிணாமூர்த்தி தோத்திரம், அத்தாமலகம், குரு ஸ்துதி சேர்ந்தது)	0	2	0
அநுவாதநூன்மாலை (வசனம்) (விவேகசூடாமணி, திருக்குதிருசிய விவேகம் சேர்ந்தது) ...	0	6	0
விசார சங்கிரகம் (வினாவிடை)	0	2	0
நான் யார்?	0	1	0
உபதேச மஞ்சரி	0	1	0
பகவத் கீதாஸாரக் கலிவெண்பா	0	1	0
ஸ்ரீ ரமண நூற்றிரட்டு ஷை எட்டும் அடங்கியது (மூன்றும் பதிப்பு)	1	4	0
ஸ்ரீ ரமண கீதை (மொழிபெயர்ப்பு-மூலத்துடன்) ...	0	8	0
உபதேசவுந்தியாரும் கலிவெண்பாவும் ..	0	1	0
உபதேசஸாரம் (நாகர ச்லோகமும் பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பும்)	0	1	0
ஸ்ரீ மஹர்ஷி வாய்மொழி	0	4	0

மஹர்ஷிகளது பக்தர்கள் செய்தவை

ஸத்தர்சனம் (உள்ளது நாற்பதின் நாகர ச்லோகமும் பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பும்) ...	0	6	0
உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்) விரிவுரை ...	0	6	0
ஸ்ரீ ரமண நாற்பது, நாகர ச்லோகத்துடன் ...	0	1	0
ஸ்ரீ ரமண த்யானம்	0	0	6

பகவான் மஹர்ஷிகளின் போட்டோக்கள், பிளாக் படங்கள் பல அளவுகளில் கிடைக்கும்.

ஸ்ரீ நிரஞ்ஜனானந்த ஸ்வாமி,

ஸர்வாதிகாரி,

ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை.